தினமணி சென்னை 3 வெள்ளிக்கிழமை, 26 ஜூன் 2020

# டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
தொலைபேசி : 044 - 28332115, தொலைநகல் : 044 - 28332113 இணையதளம் : www.tvsmotor.com
மின்னஞ்சல் : contactus@tvsmotor.com; icsta@scl.co.in CIN : L35921TN1992PLC022845

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் ஏப்ரல் மற்றும் மே 2020-ல் வெளியிடப்பட்ட செபி சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2018 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராகாமல் காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 28-வது வருடாந்திர பொதுக்கூட்டம் புதன்கிழமை 29 ஜூலை 2020 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி கம்பெனி அல்லது அவர்களின் சம்பந்தப்பட்ட முதலீட்டு பங்கேற்பாளர்களின் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 28வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 31 மார்ச் 2020-ல் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் இணையலாம் மற்றும் பங்கேற்கலாம். டிமெட்ரியலைஸ்டு முறை காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்கள், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னனு வாக்குப் பதிவு மூலமாக வாக்களித்தல் அல்லது தொலைதூர மின்னனு வாக்குப் பதிவின் மூலம் பங்கேற்க மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். கம்பெனியின் இணையதளம் www.tvsmotor.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளம் i.e. www.evoting.nsdl.comல் அறிவிப்பு பதிவேற்றம் செய்யப்படும். (தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு வசதிக்காக அளிக்கப்பட்ட முகவர்).
3. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை icsta@scl.co.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி 28வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் அல்லது மின்னனு வாக்குப்பதிவு உள்பட காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ("OAVM") மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   a. உங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.
   b. பங்கு சான்றுகளின் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்)
   c. சுய சான்றளிக்கப்பட்ட செய்யப்பட்ட பான் மற்றும்
   d. உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமை / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட செய்யப்பட்ட நகல்கள்
4. மின்னனு கிளியரிங் சேவை அல்லது வேறு எந்த வழிகளிலும் ("எலக்ட்ரானிக் வங்கி ஆணை") தங்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை புதுப்பிக்காத பட்சத்தில் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களை, மேற்கண்ட பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் icsta@scl.co.inக்கு அனுப்பி மின்னனு முறையில் அவர்களின் வங்கி கணக்கிற்கு ஈவுத்தொகையை நேரடியாக பெறுவதற்கு அவர்களது மின்னனு வங்கி ஆணையை பதிவு செய்ய வேண்டும்.
   a. ஈவுத் தொகை பெறக்கூடிய வங்கி கிளை, பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை
   b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் உங்கள் வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்.
   c. 11 டிஜிட் ஐஎப்எஸ்சி குறியீடு மற்றும்
   d. ஒரு வேளை பங்குகளை இணைத்து வைத்திருந்தால் முதலில் வைத்திருப்பவர் அல்லது உறுப்பினரின் பெயர் கொண்ட ரத்தான காசோலையின் சுயசான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
5. டிமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களின் டெபாசிட்டரியிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்க வேண்டும்.
6. மின்னஞ்சல் முகவரியை புதுப்பித்தல் செயல்முறையைத் தொடங்க டிமேட் கணக்கில் பங்குதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களில் எஸ்எம்எஸ் அனுப்ப நிறுவனம் NSDL மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) மூலம் ஏற்பாடு செய்துள்ளது. உறுப்பினர்கள் இந்த வசதியைப் பெறவும், அதற்கேற்ப அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் புதுப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மற்றும் கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களின் நலனுக்காக மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குழுவின் ஆணைப்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூன் 25, 2020